


உ




# பூர்ண பலம்

## ஆன்மீக மின் சஞ்சிகை (SPIRITUAL E-MAGAZINE)

ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்ட் மாத வெளியீடு


(மார்கழி - DECEMBER – 2021)

ஸ்ரீ மகா பெரியவா பூர்ண பலத்துடன்



"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

"நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே இராம என்ற இரண்டெழுத்தினால்."



# உள்ளடக்க அட்டவணை

தோரண வாயில் .......... 5

ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை .......... 7

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1) .......... 9

அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2) .......... 11

அன்றாட வாழ்க்கையில் ஆன்மிகம் .......... 13

வாரியாரின் அமுத மொழிகள் .......... 15

ஆதி சங்கரரும் - மண்டன மிஸ்ரரும் - வாதப் பிரதி வாதம் .......... 17

வைணவப் பெரியோர்கள் வரலாறு .......... 20

நாலாயிரம் திவ்ய பிரபந்தம் கிடைத்த வரலாறு .......... 23

மரங்களின் மகத்துவம் .......... 25

அன்று சொன்னது அதில் அர்த்தம் உள்ளது .......... 28

மஹாபாரத கொடிவழி .......... 30

தமிழ் பழமொழிகள் .......... 32

சின்ன சின்ன ஸ்லோகங்கள் .......... 32

மகா சிவராத்திரி அன்று கிரந்த (புத்தக) தானம் .......... 33

ஏன் பூர்ண பலம்? .......... 34

இந்த ஆன்மீக மின் சஞ்சிகை விற்பனைக்கு அல்ல.

ஆசிரியர்: கி. வேணுகோபால்
இணை ஆசிரியர்: ச. இராஜலக்ஷ்மி

எண்ணம் மற்றும் வடிவம்: VVSS Trust-இன் நண்பர்கள்

அட்டை மற்றும் பக்கங்கள் 9, 11, 12, 15, 17, 19, 20, 21, 22, 23, 28, 32-இல் உள்ள படங்கள் அனைத்தும் கூகிள் படத் தேடல் (Google Image Search) மூலமாய் பெற்றவை. இவை விளக்க நோக்கத்திற்காக மட்டுமே.

மற்ற படங்களின் அனைத்து உரிமைகளும் ஸ்ரீ மஹாபெரியவா வேத வ்ருக்ஷ சம்ரக்ஷண சங்கம் டிரஸ்டையே (VVSS Trust) சாரும்.

இந்த மாத பிரசுரம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

# தோரண வாயில்

## ஆசிரியர் முன்னுரை

அன்பார்ந்த ஆன்மீக தமிழ் நெஞ்சங்களுக்கு, நெஞ்சார்ந்த வணக்கங்கள்.

நெடும் காலமாய் என் மனதில் இருந்த ஒரு எண்ணத்திற்கு, இன்று ஒரு வடிவம் கிடைத்தது. என் கனவு நனவாகியது. இது நடப்பதற்கு காரணம் நமது ஸ்ரீ மஹாபெரியவாளைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? அவரே கருவாகி, உருவாக்கி உயிர்கொடுத்து உங்கள் இடையே இதை தவழச் செய்துள்ளார். இது வரை நடந்த நற்காரியங்களுக்கு விதை போட்டதே அந்த கருணைக் கடல்தான்.

தற்காலத்தில் புஸ்தக வாசிப்பு என்பது அரிதாகி விட்டது. ஏன்? அழிந்தே விட்டது எனலாம். எனவேதான் இந்த இ-நூல் முயற்சி.

இதற்கு காரணம் படித்தவர்களிடையே காணப்படும் ஒரு வித சோம்பலா? அறிவியலின் அபரிமிதமான வளர்ச்சியா? இரண்டும் தான். பின்னது, முன்னதை அப்படி ஆக்கி விட்டது. குறை சொல்வதை விடுத்து எதோ என்னால் முடிந்த பரிகார முயற்சியை செய்யலாமே என்றுதான் இந்த முயற்சி.

நானும், என் வயதை ஒத்தவர்களும் பள்ளியில் படிக்கும் போது. வாரத்தில் மூன்று வகுப்புகள் முக்கியமானதாக இருந்தது. அவைகள்,

1. உடற்பயிற்சி வகுப்பு என்னும் PT PERIOD
2. நூலக நேரம் என்னும் LIBRARY PERIOD
3. நல்லொழுக்க வகுப்பு என்னும் MORAL INSTRUCTION

தற்காலத்தில் இந்த மூன்று வகுப்புகளும் பள்ளிகளில் இல்லை. இந்த வகுப்பு நேரங்களை, கணிதம், பௌதீகம், ரசாயனம் ஆகிய பாடங்கள் பிடித்துக் கொண்டன. பெற்றோர்களும் தன் பிள்ளை உடல் வலிமை மிக்கவனாகவும், பொது அறிவு மிக்கவனாகவும், நல்லொழுக்கம் உள்ளவனாகவும் இருப்பதை விட அதிகமான மார்க் வாங்குபவனாக இருப்பதையே தெரிந்தோ தெரியாமலோ விரும்புகிறார்கள். அதன் பலனை கண்கூடாக காண்கிறோம். எங்கு பார்த்தாலும் மாணவர்களிடையே அமைதி இன்மை. STUDENT UNREST எனவே பெற்றோர்கள் இடத்திலும் அமைதி இன்மை PARENTS UNREST. நல்லொழுக்கமும், ஆன்மீகமும் ஒருங்கே இணைந்து வளர்க்கப்பட்டு இருந்தால் இது போன்ற விஷயங்கள் நடப்பதற்கு வாய்ப்பே இல்லை. சரி பள்ளியில்தான் அப்படி. வீட்டிலாவது? பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தங்கள் நேரத்தை செலவழிப்பதே இல்லை. பள்ளியில் இருந்து வந்ததும் ஏதாவது சிற்றுண்டியை கொடுத்து விட்டு. சரி உன் ரூமில் போய் படி. மடிக்கணினி அல்லது போன். மழலைகள் கையில் கூட போன். என்ன செய்யலாம்?

முதலில் பெரியோர்களாகிய நாம், முதலில் நம்மை திருத்திக் கொள்வோம். பிறகு பிள்ளைகள், உங்கள் தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா உங்களை வளர்த்தது போல் நீங்கள் உங்கள் குழந்தைகளை வளர்கிறீர்களா? இதை நினைத்தால் விடை கிடைக்கும். உலகை திருத்த நம்மால் ஆகாது. அது நம் வேலையும் அல்ல. நம் வீட்டை, குடும்பத்தை சீர் திருத்திக் கொள்வோம். இப்படி ஒவ்வொரு குடும்பமும் சீர் அடைந்தால், ஊரே தூய்மை ஆகும். பின் உலகமே தூய்மையாய் இருக்கும்.

நீங்கள் சிறுவயதில் கற்றுக்கொண்ட ஆன்மீக விஷயங்களை தூசி தட்டி நினைவு படுத்துவதற்குத்தான் இந்த நூல். இதில் நீங்களும் பங்கேற்கலாம். பங்கேற்க வேண்டும். உங்கள் இல்லத்து பெண்களும்தான். அவர்கள்தான் முக்கியம். உங்கள் ஊரில் உள்ள கோவில்கள், உங்கள் ஊரில், இல்லத்தில் நடக்கும் பண்டிகைகள், திருவிழாக்கள் அதன் தாத்பர்யம் உங்கள் முன்னோரிடம் நீங்கள் கற்றுக்கொண்ட பல நல்ல விஷயங்கள் ஆகியவற்றை பகிருங்கள். அதற்கு நீங்கள் பெரிய எழுத்தாளராக இருக்கணும் என்ற அவசியம் இல்லை. சொல்ல வந்த கருத்துதான் முக்கியம். உங்கள் படைப்பு, உங்கள் விவரம், விரும்பினால் புகைப்படம் ஆகியவற்றை எங்கள் ஈமெயில் முகவரிக்கு அனுப்புங்கள். பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

இந்த ஆன்மீக மின்னூலை உண்டாக்க காரணமே குழந்தைகளை உத்தேசித்துதான். அவர்களே எங்களின் பிரதான குறிக்கோள். அவர்கள் விரும்பும் வண்ணம், சின்னச் சின்ன ஸ்லோகங்கள் (தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும்) நன்னெறி கதைகள், ஓவியப்போட்டியும், குறுக்கெழுத்துப் போட்டியும் வினாடி வினாவும் உண்டு. அவர்களையும் ஈடுபடுத்துங்கள், வரவேற்கிறோம்.

இந்த மின்னூலை நீங்கள் பதிவிறக்கம் செய்து வைத்துக்கொள்ளலாம். பிறகு அச்சுப்போட்டு வைத்துக் கொள்ளலாம். இது முதல் பதிவு என்பதால் என்னுரை கொஞ்சம் அதிகமாகவே போய்விட்டது. இனி வரும் காலங்களில் சுருக்கமாகவே இருக்கும். இது என் பணி என்றாலும். உங்கள் பணி, நம் பணி, பல கைகள் சேர்ந்து ஓசை எழுப்புவோம். ஊர் கூடி தேர் இழுப்போம் வாருங்கள்.

நம் முயற்சிகள், பணிகள் யாவற்றிலும் நமது மஹாபெரியவாளின் ஆசிகளும் அனுகிரஹமும், அன்னை காமாட்சியின் அருளும், அவளின் சகோதரன் ஸ்ரீ வரத ராஜனின் ஆசிகளும் என்றென்றும் நம்மோடு துணை நிற்கும்.

*நன்றி வணக்கம்!*

என்றென்றும் இறைப்பணியில்,

அன்புடன்,

கி.வேணுகோபால்

**********

# ஸ்ரீ மஹாபெரியவா அருளுரை

## நாகரீக வியாதிக்கு மருந்து



இடம்: ஸ்ரீ மடம் பாடசாலை, விழுப்புரம் Image taken at Sri Matam Padasalai, Villupuram

இரண்டு கட்சிகாரர்களின் இழுப்புக்கு நடுவே ஜனங்கள் அகப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சாஸ்திரங்களின் வழியிலேயே போக வேண்டும் என்று சொல்லுகிற நாங்கள் ஒரு பக்கம் இழுக்கிறோம். சாஸ்த்திரங்களை மாற்ற வேண்டும் என்கிற சீர்திருத்தக் காரர்கள் இன்னொரு பக்கம் இழுக்கிறார்கள். நவீனப் படிப்பு முறை காரணமாக சிறு பிராயத்தில் இருந்தே சீர்திருத்தங்கள் எனப்படும் மாறுதல்களை சிலாகித்துத்தான் ஜனங்கள் படித்து இருக்கிறார்கள். படிப்பு இப்படி இருந்தாலும், பழக்கம் அடியோடு போகவில்லை. யுகாந்திரமாக வந்துள்ள நமது சாஸ்த்திர தருமங்கள் துளித்துளி எல்லோர் வீட்டிலும் சமூகத்திலும் பழக்கத்தில் இருக்கத்தான் செய்கிறது. அந்தப் பழக்க வாசனை ஒரு பக்கமும், நவீன படிப்பு வாசனை ஒரு பக்கமும் ஜனங்களை இழுக்கின்றன. இப்போது ஏற்படுத்திக் கொண்ட நாகரீக வாழ்க்கையில் திருப்தி இல்லை என்று எல்லோருக்கும் தெரிகிறது.

பழைய காலத்தில் இருந்த நிம்மதி இல்லை என்று அனைவருக்கும் தெரிகிறது. இப்போது முன்னைவிட அதிக பணம் இருப்பதாக பாவனை இருந்தாலும், தரித்திரம் போகவில்லை என்று நன்றாகத் தெரிகிறது. எல்லாம் சுபிட்சமாக இருக்கிறது; நம் தேவைக்கு அதிகமாகவே தானியம் விளைந்து இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், எங்கே பார்த்தாலும் திகில் போகவில்லை. முன்னே இருந்த கூரை, அல்லது ஓட்டு வீடு இப்போது மாடி கட்டிடமாகி விட்டது. அப்போதெல்லாம் ஏதோ நாலைந்து பாத்திரங்கள், பனைமட்டை பெட்டி, சுரைக் குடுக்கைகள் இவை மட்டுமே வீட்டுக்கு வீடு இருந்தனவென்றால், இப்போது ஏராளமான பண்டங்கள் வந்து நிரம்பி விட்டன. இவை எல்லாம் நாகரீக வாழ்க்கையில் வந்தவைதான். ஆனாலும், நிம்மதி இல்லை என்று தெரிகிறது.

பழைய ஆச்சாரப்படி நிம்மதியாக வாழ வேண்டும் என்று உள்ளுக்குள்ளே நினைக்கிறார்கள். ஆனால், வெளியிலே நாகரீகத்தையும், சீர்திருத்த பெருமையையும் விடுவதற்கு துணிச்சல் இல்லை. இரண்டு வழியிலும் சேராமல் சங்கடப்படுகிறார்கள். சாஸ்த்திர விஷயங்களில்

கொஞ்சம் விட்டுக் கொடுப்பது என்று வந்தால் கூட, கடைசியில் வெறும் லௌகீக சௌகர்யத்தை மட்டும் அனுசரிக்கும்படிதான் ஏற்பட்டு விடும். சிலர் நல்லெண்ணத்துடனேயே என்னிடம், தர்ம சாஸ்த்திரங்களை ரிஷிகள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். நீங்களும் ரிஷி மாதிரித்தான். அதனால் காலத்திற்கு தக்கபடி சாஸ்த்திரங்களை மாற்றிக் கொடுங்கள்" என்று கேட்கிறார்கள். வயலில் களை எடுப்பது போல், இப்போது சில ஆச்சார தர்மங்களை எடுத்துவிட வேண்டும் என்பது இவர்கள் அபிப்பிராயம். இப்போது சிலவற்றை களை என்று நினைத்து நான் எடுத்தால், இன்னும் கொஞ்ச காலத்திற்கு பின், இன்னொருத்தர் வேறு சில ஆச்சாரங்களை எடுக்கலாம். இப்படியே போய்க் கொண்டிருந்தால், எது பயிர், எது களை என்ற விவஸ்தை இல்லாமல் வயல் முழுவதுமே போய்விடும். ரிஷிகள் சொன்னார்கள் என்பதற்காக தரும சாஸ்திரங்களை நாம் அனுசரிக்கவில்லை என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். என்றைக்கும் மாறாமல் சாஸ்வதமாக இருக்கும் ஈஸ்வர கட்டளையான வேதத்தை அனுசரித்து ரிஷிகள் இந்த விதிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதால் தான் இவற்றை பின்பற்றுகிறோம். அதை உள்ளபடி ரக்ஷிக்கத்தான் பிரயத்தனப்பட வேண்டுமே அன்றி, மாறுதல் செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை.

சாஸ்த்திரப் பிரகாரம் நடப்பது இந்தக் காலத்தில் சாத்தியமே இல்லை என்று நினைத்து விடக் கூடாது. வியாபார வேகத்தில் வளர்ந்து விட்ட லௌகீக நாகரீகத்தை விட்டுவிட்டு, தேவைகளைக் குறைத்துக் கொண்டால், யாருமே இப்படி ஆசாரங்களை விட்டுப் பணத்திற்காக பறக்க வேண்டியது இல்லை. கர்மா அனுஷ்டானங்களை செய்ய பண வசதி வேண்டியதே இல்லை. ஆடம்பரமாக செலவு செய்து பூஜை செய்யவேண்டும் என்பது இல்லை. காய்ந்த துளசி தளமும், வில்வபத்திரமும் பூஜைக்குப் போதும். நாம் சாப்பிடுகிற அன்னத்தையே நைவேத்யம் என்று காட்டினால் போதும். விவாஹமும் சாஸ்த்திர அனுஷ்டானம் தானே. அதற்கு ஏகமாய் செலவு ஆகிறதே, என்று கேட்கலாம். இப்போது நடக்கிற ஆடம்பரம் எதுவுமே சாஸ்த்திர சம்மதமான விவாகத்திற்கு தேவை இல்லை. குறிப்பாக இப்போது விவாகங்களில் மிகப் பெரிய செலவாக உள்ள வரதக்ஷிணைக்கு சாஸ்த்திர சம்மதமே இல்லை. சாஸ்த்திர சம்மதமான கர்மங்களுக்கு பணம் முக்கியமானதாக இருந்தால், பணக்காரர்களுக்கு மட்டும்தான் நம் மதம் உரித்தானது என்றாகி விடும். உண்மையில் அப்படி இல்லவே இல்லை.

அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நாலு வாழ்க்கைப் பயன்களில் இன்பத்தை மட்டும் தேடி, அதற்காக பொருளுக்கு மட்டும் அலைந்து கொண்டு இருக்கிறோம். இதை மாற்றிவிட்டு, (க்ஷேமத்திற்காக) அறத்தின் (தர்மம்) மூலம் பாடுபட வேண்டும். வாழ்க்கையை எளியதாக்கிக் கொண்டால் பொருளுக்காக அலைய வேண்டாம்; அறங்களை அப்போது பின் பற்ற முடியும்.

*(சுமார் 75, 80 ஆண்டுகளுக்கு முன்பே பெரியவா வருத்தப்பட்டு கூறியது. அப்போதே இப்படி என்றால்; பெரியவா இப்போது இருந்திருந்தால் எப்படி வருத்தப் படுவார் என்பதை எண்ணி. கூடுமானவரை அவர் சொன்ன வழிமுறைகளை நமது வாழ்க்கையிலும் கடைப்பிடித்து உய்வோம்).*

**********

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (1)

*கமலவல்லி தாயார் சமேத கதிர் நரசிங்கப் பெருமாள் ஆலயம், தேவர் மலை*



**அமைவிடம்:** கரூரில் இருந்து தெற்கே, கரூர் - திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பாளையம் என்ற ஊரில் இருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. நல்ல சாலை வசதி.

**இறைவன் திருநாமம்:** கதிர் நரசிங்கப் பெருமாள்

**இறைவியின் திருநாமம்:** கமலவல்லி நாச்சியார்

**கோவில் ஸ்தல வரலாறு:** ஹிரண்ய கசிபுவை சம்காரம் செய்த பின்னும் கோபமும், உக்கிரமும் தணியாத நிலையில், ஒரு காலத்தில் அடர்ந்த வனமாக இருந்த பகுதிக்கு வந்தார். அப்போது தேவர்கள் அவரை வழிமறித்து துதித்தனர். "தேவர் மறி" என்ற அந்த இடமே தேவர் மலை என்று

பின்னாளில் மருவியது. தேவர்கள் அங்கே உள்ள சுனையில் இருந்து குளிர்ந்த நீரை எடுத்து பெருமாளுக்கு அபிஷேகம் செய்தனர். உளம் குளிர்ந்த பெருமாள் தேவர்களை ஆசிர்வதித்தார். பின்னர் தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, அங்கேயே அமர்ந்து வரும் பக்தர்களை வரமளித்துக் காப்பேன் என உறுதி அளித்தார்.

ஒருகாலை தரையில் ஊன்றியும், ஒரு காலை மடித்தும் அமர்ந்த திருக்கோலம், "வீராசன திருக்கோலம்" என அழைக்கப் படுகிறது. ஒரு கையில், இரு விரல்களை மடக்கி, பக்தர்களை “வா” என்று அழைப்பது போலவும். மற்றொரு கையால் அபய முத்திரை காட்டுகின்ற கோலம். வேறு எங்கும் காண முடியாத அற்புதக் கோலம்.

500 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த இந்த ஆலயம் ஒரு காலத்தில் மிகவும் சிதிலம் அடைந்து இருந்தது. அதை நானே பார்த்து இருக்கிறேன். பின்னர் குமுதம் ஜோதிடம் முன்னாள் ஆசிரியர் ஸ்ரீ A M ராஜகோபால் அவர்களின் சீரிய முயற்சியாலும், ஸ்ரீ அஹோபிலமடம் 45 - வது ஜீயர் ஸ்வாமிகளின் ஆதரவோடும், கோவில் புணருத்ராணம் செய்யப்பட்டு. கும்பாபிஷேகம் மிக சீரும் சிறப்புமாய் நடை பெற்றது.

"நாளை என்பது நரசிம்மன் இடத்தில் இல்லை" - அதாவது தன்னை நாடி வரும் பக்தர்களின் குறைகளை உடனுக்குடன் போக்கும் மிகப்பெரிய வரப்பிரசாதி.

இந்த ஆலயத்தின் பின்புறம் ஒரு ஊற்று உள்ளது. அது எங்கிருந்து உற்பத்தி ஆகின்றது என இதுவரை கண்டுபிடிக்க இயலவில்லை. இந்த ஊற்றிலே நீராடி, சுவாமி தரிசனம் செய்தால், பித்ரு தோஷம், பிரமஹத்தி தோஷம் கூட போய்விடும்.

ஆலயத்தின் வளாகத்திலேயே பைரவர் சன்னதியும் இருப்பது மற்றொரு சிறப்பு. வைஷ்ணவ ஆலயத்தில் சிவனின் அம்சமான பைரவருக்கு சந்நிதி இருப்பது "சிவ-வைஷ்ணவ" -பேதம் இன்மைக்கு சான்றாக திகழ்கிறது. தேய்பிறை அஷ்டமி அன்று பைரவருக்கு, திரளான மக்கள் கூடி ஆராதனை செய்கிறார்கள். சனிக்கிழமை, ஸ்வாதி நக்ஷத்திரம் போன்ற காலங்களில். தாயார், நரசிம்மருக்கு சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகிறது. வாய்ப்பு வசதி உள்ளவர்கள் அவசியம் ஒரு முறை தரிசித்து நரசிங்க பெருமாளின் அனுகிரஹத்திற்கு பாத்திரமாகும் படி வேண்டுகிறோம்.

தொடர்புக்கு,   ஸ்ரீ பாலாஜி பட்டர் - +91 99436 10705.

**********

# அரிய ஆலயமும் அற்புத தகவல்களும் (2)

*சுந்தரவல்லி/கற்பூரவல்லி சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் ஆலயம், முசிறி*



**அமைவிடம்:** திருச்சிராப்பள்ளி -- சேலம் நெடுஞ்சாலையில் உள்ள முசிறி

**இறைவன் திருநாமம்:** ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர்

**அம்பாள் திருநாமம்:** அருள்மிகு கற்பூர வல்லி / சுந்தரவல்லி

**ஸ்தல விருக்ஷம்:** கருங்காலி (மிருகசீர்ஷ நக்ஷத்ர பரிகார ஸ்தலம்)

முசிறி நெடுஞ்சாலையில் இறங்கி சிறிது தூரம் வந்தால் இந்த கோவிலை அடையலாம். கிழக்கு பார்த்த ஈஸ்வரன். ஆலயத்தின் உள்ளே நுழைந்து, நீண்ட நடைபாதை வழியாக சென்றால், வாத்ய மண்டபம், கொலு மண்டபம், உற்சவ மண்டபம் அடுத்து மகா மண்டபம். துவார பாலகர்களை வணங்கி உள்ளே நுழைகிறோம். அற்புதமான சிவலிங்க மூர்த்தி, சிரசில் (மௌலியில்) நான்காம் பிறை சூடி அருள் பாலிக்கிறார்.

ஆலயத்தின் வடக்குப் பிராகாரத்தில், தனி சந்நிதியில் குடி கொண்டு இருக்கிறாள் அன்னை "கற்பூர நாயகி அல்லது சுந்தரநாயகி" பெயருக்கு தக்கபடி அப்படி ஒரு அழகு. நான்கு திருக்கரங்கள். நின்ற திருக்கோலம்.மேலிரண்டு கரங்களில் தாமரை மலர்கள். கீழிரண்டு கரங்கள் அபய, வரத முத்திரைகளை காட்டி, புன்முறுவலோடு நம்மை வரவேற்கிறாள். அன்னையை கண்டதும் நம் கவலைகள் யாவும் காற்றிலே கரைந்து செல்வதை போல ஒரு தெய்வீக அனுபவம் கிட்டும்.

இங்கே ஒரு விசேஷமான பரிகார முறை ஒன்று உள்ளது. அதாவது. தாமரை மலரில் ஒரு தீபம் ஏற்றிவைத்து, அம்பாள் சந்நிதியை மூன்று முறை வலம் வந்து, அம்பாள் சந்நிதியில் வைத்து விட்டு, அர்ச்சனை செய்ய வேண்டும். இதனால் நாம் கோரும் வரங்களை அன்னை நமக்கு அளிப்பாள் என்பது பக்தர்கள் நம்பிக்கை. இதனை செவ்வாய், வெள்ளி, பௌர்ணமி காலங்களில் செய்வது விசேஷம்.




அதே போல திங்கட்கிழமை, சந்திரமௌலீஸ்வரருக்கு, முறையாக அபிஷேகம், அர்ச்சனை செய்து வழிபட்டால், உடல் பிணிகள் யாவும் போகும். அதிலும் குறிப்பாக. மன நலம் குன்றியவர்கள் வந்து வழிபட்டால் விரைவில் நோய் குணமாகும் என்பது காலங்காலமாய் இருந்துவரும் நம்பிக்கை (ஒன்று கவனிக்கவும்: சிவனுக்கு இங்கே. இங்கிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள குணசீலம் பிரசன்ன வெங்கடாசலபதி ஆலயம் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் மன நோய் போக்கும் மகத்தான ஸ்தலம்).

சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தை வலம் வரும்போது கோஷ்டத்தில், நால்வர், விநாயகர், வல்லி தேவசேனா சமேத சுப்பிரமணியர், தக்ஷிணாமூர்த்தி, துர்கை, விசாலாக்ஷி சமேத விஸ்வநாதர் ஆகியோரையும் தரிசிக்கலாம். ஆலயத்தில் இருந்து சுமார் அரை கிலோமீட்டர் நடந்தால், அழகான அகண்ட காவேரி. ஆனந்தமாய் ஸ்நானம் செய்யலாம். இந்த அக்ராஹாரத்தில்தான் முசிறி தீக்ஷிதர் போன்ற மஹான்கள் வாழ்ந்த இடம், வீடு உள்ளன. இப்போதும் அங்கே அவருடைய புத்திரர்கள் நித்ய அக்னிஹோத்திரிகளாய் வாழ்ந்து கொண்டு தங்கள் அனுஷ்டானங்களை கடை பிடித்துக்கொண்டு, கோசாலை, வேதபாடசாலை ஆகியவைகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

வாய்ப்பு வசதி உள்ளவர்கள் அவசியம் தரிசிக்க வேண்டிய ஸ்தலம். மேலும் இங்கிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள, திரு ஈங்கோய் மலை, குளித்தலை கடம்ப வனேஸ்வரர் ஆலயம், அய்யர் மலை மேலும் நம் மஹாபெரியவா வேதம் பயின்ற மஹேந்திர மங்கலம் ஆகிய இடங்களையும் தரிசிக்கலாம்.

**********

# அன்றாட வாழ்க்கையில் ஆன்மிகம்



- ஸ்ரீமதி பாமா வேணுகோபால்

"பாடறியேன் படிப்பறியேன் பள்ளிக்கூடம் தானறியேன். ஏடறியேன் எழுத்தறியேன் எழுத்துவகை நானறியேன்", என்பது ஒரு திரைப்படப் பாடல். ஆனால் நான் உயர்நிலை வகுப்புவரை பள்ளிக்கூடம் சென்று இருக்கேன். பிறந்த வீட்டில் கொஞ்சம் ஆன்மிகம் புகுந்த வீட்டில் கொஞ்சம் ஆன்மிகம், அதுவும் காஞ்சிபுரம் வந்து குடி அமர்ந்தபின் அதிகமாகவே ஆன்மிகம் அறிந்து கொண்டேன். என் கணவரும், பிள்ளைகளும் கட்டாய படுத்தியதால், எனக்கு தெரிந்ததை இங்கே சொல்கிறேன். பிழைகள் ஏதும் இருந்தால் அருள் கூர்ந்து மன்னிக்கவும்.

திருமணமான பெண்கள் கூடுமானவரை அதிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்து, முதலில் படுக்கையை சுற்றி வைக்கவும். பின் பல் தேய்த்து, முகம் கழுவி நேராக சுவாமி உள்ளிற்கு வந்து, விளக்கில் புதிய திரி எண்ணெய் ஊற்றி விளக்கேற்றி நமஸ்கரிக்கவும். தாயே இன்று எல்லோருக்கும் நல்ல பொழுதாக விடியட்டும் என வேண்டிக்கொள்ளுங்கள். பிறகு, கொல்லைப்புற கதவை (கதவு இல்லாத வீடாக இருந்தால் பின் பக்கத்து ஜன்னலை திறக்கவும். பிறகு வாசல் கதவை திறக்கவும். அப்போதான் வீட்டில் உள்ள அக்கா (மூதேவி) வெளியேறி தங்கை (ஸ்ரீதேவி) உள்ளே வருவாள். வாசலிலும் ஒரு விளக்கை ஏற்றி வையுங்கள். பின் நிலைப்படி, வாசல் ஆகிய இடங்களை நீர் தெளித்து சுத்தம் செய்யுங்கள். சாணம் தெளிப்பது சிறப்பு. பிறகு கோலம் போடவும். அக்காலத்தில் கோலமாவுடன் அரிசி மாவும் கலந்து போடுவார்கள். ஆனால் அது இக்காலத்தில் வேண்டாம். காரணம் அரிசி மாவை சாப்பிட எறும்புகள் வரும். உங்கள் வீட்டிலேயே, வெளியே செல்ல இரு சக்கர வாகனங்களை எடுக்கும் போது எறும்புகளின் மீது தெரியாமல் ஏற்றி கொன்று விடுவோம். அல்லது வாசலில் போகும் வாகனங்கள் அதனை கொன்று விடும். எனவே, உணவளிக்க போய், அதன் உயிரையே பறிக்கும் பாவம் வேண்டாம். எறும்புகளுக்கு உணவு அளிக்க விரும்பினால், வாரம் ஒரு முறை அரிசி குருணையோடு, கொஞ்சம் வெல்லம் கலந்து, வெளிப்புற சுவர் ஓரமாக தூவி விடவும். அது போதும்!

பிறகு சமையல் வேலைகள் துவங்கும். குழந்தைகள் எழுந்தவுடன் அவர்களையும் படுக்கையை எடுத்து வைக்க சொல்லி பழக்குங்கள். பிறகு அவர்கள் பல் தேய்த்து முகம் கழுவியபின் சுவாமி அறைக்கு அழைத்து சென்று நமஸ்காரம் செய்யச் சொல்லி பழக்குங்கள். இது முக்கியம் பிறகே பால் காபி ஏதுவானாலும். பின் கணவர் குழந்தைகள் வெளியே அவரவர் வேலை, பள்ளி சென்றதும். நீங்கள் குளித்து விட்டு, (தினமும் தலைக்கு குளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, சிறிது மஞ்சள் கலந்த நீரை தலையில் தெளித்துக் கொண்டு உடலுக்கு மட்டும் குளித்தால் போதும்) பின் நீங்களும் காலை உணவை தவறாமல் எடுத்துக் கொண்டு பிறகு சுவாமி அறைக்கு சென்று ஒரு அரை மணி நேரம் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள். உங்களுக்கு தெரிந்த ஸ்லோகங்களையும் பாடல்களையும் சொல்லலாம். ராம நாமம் ஜெபிக்கலாம், எழுதலாம். பிறகு மத்திய உணவு பிற பணிகள். மாலை ஐந்து மணிக்கு முகம் அலம்பி தயாராகி

இருந்து. குழந்தைகள் வந்ததும் அவர்களையும் அழைத்து கொண்டு அருகில் உள்ள கோவிலுக்கு செல்லுங்கள், இல்லை வீட்டிலேயே பிரார்த்தனை செய்ய பழக்குங்கள். விடுமுறை நாட்களில் கோவிலுக்கு அழைத்து செல்லுங்கள். அங்கே உள்ள சிலைகள், சிற்பங்களைக் காட்டி விளக்கம் தாருங்கள். ஆன்மீக கதைகளை குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுங்கள். அவர்கள் பள்ளியிலும், அக்கம் பக்கத்திலும் சேரும் குழந்தைகளை கண்காணித்து நல்ல சேர்க்கையை ஏற்படுத்தி தாருங்கள். விடுமுறை காலங்களில் உறவினர் வீடுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள் உறவின் முக்கியத்துவத்தை எடுத்து சொல்லுங்கள். மஹான்கள், குருமார்கள் ஆகியோரின் வரலாறுகளை சொல்லித்தாருங்கள்.

சிறு வயதிலேயே வாரம் ஒரு திருக்குறள், மாதம் ஒரு பத்து வரி ஸ்தோத்திர பாடல்களை சொல்லி கொடுத்து வளருங்கள். "படி படி அவனை/அவளை விட அதிகம் மார்க் வாங்கணும்" என்று சொல்லி சிறு வயதிலேயே போட்டி மனப்பான்மையை வளர்க்காதீர்கள். போட்டி பின் பொறாமையாக மாறும் பிறகு சண்டை இடும் அதெல்லாம் குழந்தைகளின் வளர்ச்சிக்கு நல்லதல்ல.


நாள், கிழமை, பண்டிகை இவைகளை உங்கள் சக்திக்கு தக்கபடி இல்லத்தில் கொண்டாடி. அதன் தாத்பர்யத்தை உங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கவும்.

சுமங்கலிகளுக்கு ஒரு வார்த்தை தயவு செய்து ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கொள்ளாதீர்கள். குங்குமத்திற்கு முதலிடம் தாருங்கள். இயலாத பக்ஷத்தில் சாந்து பொட்டு. தலை முடியை விரித்து போட்டு கொள்ளாதீர்கள். உங்கள் பெண் குழந்தைகளையும் அதற்கு அனுமதிக்காதீர்கள். தொலைக்காட்சி, நெடும் தொடர், குறுந்தொடர் ஆகியவைகளை பார்க்காதீர்கள். உங்கள் குழந்தைகள் அவர்கள் கணினி, போன் இவற்றில் என்ன விஷயங்களை பார்க்கிறார்கள், அவர்களின் நட்பு வட்டங்களில் யார் இருக்கிறார்கள் என்பதையும் கண்காணியுங்கள். ஐந்தில் வளைந்தால் தான் ஐம்பதில் வளையும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். குழந்தைகளை முறையாக வளர்க்காமல் இஷ்டப்படி விட்டு பிறகு பிரச்சனை வந்தபின் வருந்துவதால் பலன் இல்லை.

வாழ்க்கையில் ஒரு நெறிமுறை வரணும் அதற்கு சிறுவயதில் இருந்தே நல்ல பழக்க வழக்கங்கள், தெய்வ பக்தி ஆகியவற்றை சொல்லிக்கொடுத்து வளர்த்தால் பின் ஆயுள் முழுக்க கவலை இல்லை. **"இந்த மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்"**.

**********

# வாரியாரின் அமுத மொழிகள்



திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள் மிகப் பெரும் தவ சீலர். அவர் கால் படாத இடமே இல்லை எனலாம். அயராத உழைப்பு, வெண்கலக் குரலுக்கு சொந்தக் காரர். இவரின் சொற்பொழிவில் பக்திரசம் வழிந்தோடும் தேவையான இடத்தில் பிறரை குற்றம் சொல்லாத நகைச் சுவை பேச்சு. இவரின் பொன்மொழிகள் சிலவற்றை சிந்தித்தாலே நமக்கு நல்லகதி கிடைக்கும்.

- துன்பங்கள் அனுபவித்த காலங்களை மறந்து விடு. ஆனால் அது கற்பித்த பாடத்தை ஒருபோதும் மறக்காதே.
- நல்லவராய் இருப்பது நல்லதுதான், ஆனால் நல்லது கேட்டது தெரியாதவராக இருப்பது நல்லது அல்ல.
- தேவை இன்றி பெண்களை கோபிக்க கூடாது. பெண்கள் கண்ணீர் சிந்தினால் அந்தக் குடும்பத்திற்கு கேடு நேரும்.
- தேனியை போலவும், எறும்பை போலவும் உழைத்து உண்ணுங்கள். அது உங்களுக்கு அமைதியையும், ஆரோக்கியத்தையும் தரும்.
- தன்னுடைய புத்தகம், பெண், பணம் இவைகளை பிறரிடம் கொடுத்தால் திரும்பி வராது. அப்படியே வந்தாலும் புத்தகம் கிழிந்தும், பணம் குறைந்தும், பெண் மாசு பட்டும் வரும்.

- ஆறுதடவை பூமியை வலம் வருவதாகிலும், பதினாறாயிரம் தடவை காசியில் குளித்தாலும், பல நூறு தடவை சேது ஸ்நானம் செய்தாலும் கிடைக்கின்ற புண்ணியங்கள். பெற்ற தாயை ஒருமுறை வணங்கினாலே கிடைத்துவிடும்.
- தீப் பந்தத்தை கீழ் நோக்கிப் பிடித்தாலும் அதன் ஜுவாலை மேல்நோக்கியே இருக்கும். அதுபோல உயர்ந்த குணத்தை உடையவனைக் கீழ்ப்படுத்த யாராலும் முடியாது.
- எங்கும் நிறைந்த இறைவனை, எளிமையாக்க கிடைக்கும் நீரையும் பூவையும் கொண்டு பூஜிக்க வேண்டும்.
- பாலுக்குள் இருக்கும் தயிரும் நெய்யும் கண்ணுக்குத் தெரிவதில்லை. அது போல உண்மையான பக்தியினால் மட்டுமே இறைவனை உணர முடியும்.
- வயலில் தூவப்படும் சில விதைகளே பல்லாயிரம் மடங்காக விளைந்து விதைத்தவனிடம் திரும்பக் கிடைக்கிறது. அதுபோல நல்ல செயலோ, தீய செயலோ ஆயிரம் மடங்காக செய்தவனிடம் திரும்பி வருகிறது.

**********

# ஆதி சங்கரரும் - மண்டன மிஸ்ரரும் - வாதப் பிரதி வாதம்

(வந்தார் – கண்டார் - வென்றார்)



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு ஈஸ்வரரின் அவதாரமாக விளங்கிய ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளின் அவதாரம் நிகழ்ந்தது. இவரே ஆதி குரு தட்சிணா மூர்த்திக்கு பின் அவதாரம் எல்லா குருமார்களுக்கு மூத்தவர். இதனை சனாதன தர்மத்தின் மற்ற சித்தாந்தப் பெரியோர்களும் ஏற்றுக் கொண்டு உள்ளனர். அந்தக் கால கட்டத்தில் ஏகப்பட்ட சித்தாந்தங்கள், வழிபாட்டு முறைகள், காட்டுமிராண்டித் தனமான **"காபாலிகம்"** ஆகியன இருந்து வந்தன.இதனால் மக்கள் குழப்பத்திற்கு ஆளாகி. எங்கள் வழி பாட்டு முறைதான் சிறந்தது எனக்கூறி சண்டை இட்டுக் கொண்டு அமைதி இல்லாமல் வாழ்ந்தனர். இதனை நெறிப்படுத்தவே ஆதி சங்கரர் அவதாரம் நிகழ்ந்தது.

அக்காலத்தில், மிதிலை என்ற நாட்டில் (தற்போது பிஹார் மாநிலம்) மஹிஷமதி (தற்போது மஹிஷி என அழைக்கப்படும் - பிஹார் மாநிலம் சஹாரா மாவட்டத்தில் உள்ளது) என்ற ஊரில் மண்டன மிஸ்ரர் என்ற மாபெரும் அறிஞர் வாழ்ந்து வந்தார். அவர் அத்வைத சித்தாந்தத்தை வெறுப்பவர் (எதிர்ப்பவர்) அவரை வாதப் போரில் வெற்றிகண்டு, தனது சீடராக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் இருப்பிடம் நோக்கி விரைந்தார். (இந்த இடத்தில் சில குதர்க்க வாதிகள் வினவுவார்கள். சங்கரரோ 32 ஆண்டுகளே வாழ்ந்தவர். இமயம் முதல் சேது வரை. பாரதத்தின் வடக்கு முதல் தெற்கு வரை, கிழக்கு முதல் மேற்கு வரை எப்படி பயணித்தார்? வாகன வசதி இன்றி எனக் கேட்பார்கள். யோகா சக்தி இருந்தால் அடுத்த நொடியே விரும்பிய இடத்தில் மட்டுமல்ல. ஒரே நேரத்தில் பல இடங்களில் தோன்ற முடியும். இப்போது கூட சித்தர்கள் தோன்றுவதை சர்வக்ஞன் ஆன சங்கரரால் ஏன் செய்ய இயலாது?


அங்கு சென்று நதியிலே நீராடிவிட்டு கரை ஏறும்போது, தண்ணீர் எடுக்க வந்த சாதாரண பெண்கள் இலக்கண சுத்தமாக ஸம்ஸ்ருதத்தில் பேசிக்கொண்டு வந்தனர். இதை கவனித்த சங்கரர் வியப்படைந்து. ஒரு பெண்மணியை அழைத்து அம்மா, இங்கே மண்டன மிஸ்ரரின் வீடு எங்கே இருக்கிறது என வினவ, அந்தப் பெண் அதோ தெரிகிறது பாருங்கள் ஒரு அக்ராஹாரம் அங்கே சென்று. எந்த வீட்டின் வாசலில் இரண்டு கிளிகள் தர்க்க சாஸ்திர விசாரம் செய்கிறதோ அந்த வீடுதான் எனச் சொல்ல அதிசயித்தார் சங்கரர்.

கிளிகள் தர்க்க சாஸ்திரம் பற்றி பேசுகிறதா?
அப்போ அவர் எப்படிப் பட்ட பண்டிதராய் இருக்க வேண்டும்?

அவரைக் காணும், ஆவல் மேலிட விரைந்து சென்றார்.

வீட்டை அடைந்தார். வீடு உட்பக்கம் தாழிட்டு இருந்தது. அன்று மிஸ்ரரின் வீட்டில் ஸ்ரார்த்தம் நடந்து கொண்டு இருந்தது. முடியும்வரை கதவை திறக்க மாட்டார்கள். உள்ளே செல்ல வேண்டும். யோசித்தார் சங்கரர். அக்காலத்தில் மரம் இருப்பவர்கள், ஒவ்வொரு மரமாக ஏறமாட்டார்கள். ஒரு மரத்தின் கீழே நின்று ஒரு மந்திரத்தை உச்சரிப்பார்கள். மரம் வளைந்து அவர் ஏறுவதற்கு ஏதுவாக உதவும். இந்த மந்திரம் அவர்களின் முன்னோர்கள் சொல்லித்தந்து பழக்கியது. எல்லாம் அறிந்த சங்கரர் இதையும் அறிவார். வீட்டின் பின்புறம் இருந்த தென்னை மரத்தின் அருகே சென்று மந்திரத்தை உச்சரிக்க, மரம் வளைந்து கொடுத்தது. மரத்தில் ஏறி வீட்டின் முற்றத்தில் குதித்து உள்ளே சென்றார். அதிர்ச்சி உற்றார் மிஸ்ரர். இருப்பினும் ஸ்ரார்த்தம் நடக்கையில் ஒரு துறவியை கண்டால் அவரையும் அழைத்து உணவு அளிக்க வேண்டும் என்கிறது சாஸ்த்திரம். மிஸ்ரருக்கு சன்யாசிகளைப் பிடிக்காது. இருப்பினும் விதிகளுக்கு உடன்பட்டு (கிண்டலாக), "எங்கிருந்து மொட்டை" என்றார்.

சங்கரரும் கழுத்துக்கு மேல் மொட்டை என கிண்டலாகவே பதில் சொன்னார். சரி உணவு அருந்த வரும் என அழைக்க, "நான் உணவருந்த வரவில்லை, உம்மோடு வாதம் புரியவே வந்தேன் என சங்கரர் பதிலளிக்க. ஸ்ரார்த்தத்தை முடித்து விட்டு வருகிறேன் என்றார் மிஸ்ரர். பிறகு கார்யங்கள் முடிந்தபின், “வாரும் வாதத்திற்கு பந்தயம் என்ன என வினவ". சங்கரர் "நீர் தோற்றால் இல்லறத்தை விட்டு துறவறம் ஏற்று என் சீடனாய் பின்தொடர்ந்து வரணும் என்றார். மிஸ்ரரும் சரி, நீர் தோற்றுவிட்டால், துறவறத்தை விட்டு, இந்த ஊரிலேயே ஒரு பெண்ணை மணந்து கொண்டு இல்லறம் ஏற்று என் சீடனாக வேண்டும் சம்மதமா? சங்கரர் சரி என்றதும்; போட்டிக்கு யார் நடுவர்? இந்த இருவரைத் தவிர பெரிய வித்வான்கள் யாரும் அந்த ஊரில் இல்லை. மிஸ்ரரின் மனைவி "சரசவாணியே" போட்டிக்கு நடுவர் ஆனார். (இங்கே மண்டன மிஸ்ரர் பிரம்மாவின் அவதாரம் எனவும், அவர் மனைவி சரசவாணி சரஸ்வதியின் அவதாரம் எனவும் சொல்வர்) சரசவாணி, இரண்டு மலர்மாலைகளைக் கொடுத்து இருவரையும் அணிந்து கொள்ளச் செய்தாள்; போட்டி தொடங்கியது, மிஸ்ரர் முதலில் கேள்விக் கணைகளை தொடுக்க, சங்கரரின் திருவாக்கில் இருந்து, அருவியாய் பதில்கள் கொட்டியது.



பிறகு சங்கரர் கேட்க மிஸ்ரர் பதில் கூற, ஒரு கட்டத்தில் மிஸ்ரர் பதில் அளிக்க முடியாமல் திணற "மிஸ்ரரின் மாலை வாடியது. தான் தோற்று போனதை உணர்ந்தார். இப்போது வாணி, போட்டியின் முடிவை சொல்ல வேண்டிய கட்டாயம். "கணவர் தோற்றுப் போனார் என்பதை எப்படி சொல்வாள்? வாக்கிற்கே அதிபதி அல்லவா அவள்? சொல்கிறாள் "இரண்டு சன்யாசிகளும் பிட்சைக்கு எழுந்தருள வேண்டும் என்று மிஸ்ரர் தோற்றுப்போனார், பந்தயப்படி இல்லறம் துறந்து துறவறம் ஏற்பீர்" என சொல்லாமல் சொல்ல, மண்டன மிஸ்ரரும், துறவறம் ஏற்று ஆதி சங்கர பகவத் பாதரின் அருமை சீடர் ஆனார். அவரும் அத்வைத சித்தாந்தங்களுக்கு வலுவூட்டும் வண்ணம் நிறைய கிரந்தங்களை எழுதி உள்ளார்.

வாழ்க ஆதிசங்கரர், வாழ்க மண்டன மிஸ்ரர்

*அடுத்த இதழில் ஆதிசங்கரரின் ஷண்மத ஸ்தாபனத்தைப் பற்றி பார்க்கலாம்.*

**********

# வைணவப் பெரியோர்கள் வரலாறு

"சிவனும் விஷ்ணுவும் நமக்கு இரு கண்கள்" - ஸ்ரீ மஹாபெரியவா




இந்த பாரத புண்ணிய பூமியிலே எண்ணில் அடங்காத குருமார்களும், ஞானிகளும், மகான்களும், சித்தர்களும், ஜீவன் முக்தர்களும். அவ்வப்போது தோன்றி மக்களை நல்வழிப் படுத்தி உள்ளனர். இந்த மின் சஞ்சிகை, வெறும் சிவபரமாக மட்டுமே அமையாமல், வைணவம், மத்வ சித்தாந்தம் போன்ற விஷயங்களையும் தாங்கி வரும். எல்லாம் ஒன்று என்பதே அத்வைத சித்தாந்தம். அந்த வகையில், ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் தோன்றிய மகான்களையும், மஹநீயர்களைப் பற்றியும் தொடர்ந்து காணலாம்.

**முதல் மூன்று ஆழ்வார்கள்:**

பன்னிரண்டு ஆழ்வார் பெருமக்களில் முதல் மூவர், பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார். இவர்கள் சாதாரண மனிதர்கள் போல் தாயின் வயிற்று வழி வந்தவர்கள் அல்லர். சமகாலத்தவர்கள். மூவருமே சித்தார்தி ஆண்டு ஐப்பசி மாதம், முறையே திருவோணம், அவிட்டம், சதயம் ஆகிய திருநக்ஷத்திரங்களில் அவதரித்தவர். மூவரும் முறையே, தாமரை மலர், நீலோற்பவ மலர், சிவப்பு அல்லிமலர் ஆகிய மலர்களில் தோன்றியவர்கள். இந்த மூவரையும் சேர்த்துப் பார்க்க பெருமாள் திருவுளம் கொண்டார். திருக்கோவிலூர் என்ற ஸ்தலத்திற்கு

முதலில் பொய்கை ஆழ்வார் வந்தார். மிருகண்டு முனிவரின் திருமாளிகைக்கு சென்று சேவித்து விட்டு, அங்கே இருந்த “ரேழி”-இல் (ஒரு சிறிய இடம்) படுத்தார். அப்போது பூதத்து ஆழ்வாரும் வந்தார். இருவரும் முகமன் கூறி. "இங்கே ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம் எனக் கூறி பெருமாளின் பெருமைகளை பேசியபடி அமர்ந்தனர். அப்போது பேயாழ்வாரும் வந்து சேர "இங்கே உள்ள இடத்தில் ஒருவர் படுக்கலாம், இருவர் அமரலாம், மூவர் நிற்கலாம்" என மூவரும் நின்றபடி "திருமால் பெருமையை" பேசி மகிழ்ந்தனர், அப்போது அங்கே பெருமாள் அருவமாய் தோன்றி காற்று, இருட்டு, மழையை உண்டாக்கி அம்மூவருக்கும் இடையே புகுந்து நெருக்குதலை உண்டாக்கினார், தங்களுக்கு இடையில் யாரோ புகுந்து இருக்கிறார்கள் என்பதை உணர்ந்த அம்மூவரும் வெளிச்சம் ஏற்ற விரும்பினார், விளக்கிற்கு என்ன செய்வது மூவரும் தங்கள் இனிய தமிழால் விளக்கு ஏற்றினர்,



முதலாம் ஆழ்வார் பாடினார்,

**"வையம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்யக் கதிரோன் விளக்காகக்”**

மற்றவர்,

**“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக**
**இன்புறு சிந்தை இடு திரியா"**

எனப்பாட விளக்கு எரிந்தது, வெளிச்சம் கிடைத்தது, அந்த வெளிச்சத்தில் மாலவன், மாதவன், மதுசூதனன் தெரிந்தான்

மூன்றாமவர் பாடினார்,

**“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்”**



ஆஹா!! மஹாவிஷ்ணுவின் மார்பில் எந்நாளும் குடிகொண்டுள்ள மஹா லக்ஷ்மியை, ஸ்ரீயை, திருவை முதலில் கண்டார், பின்புதான் பொன்னார் திருமேனியைக் கொண்ட பெருமாளை கண்டனர். இதில் இருந்து தெரிவது முதலில் நமக்கு தாயார் சம்மந்தம் வேண்டும். பின் அவள்தான் நம்மை பெருமாளிடம் அழைத்துச்செல்வாள். உலக வாழ்க்கையிலேயே காண்கிறோமே, நாம் முதலில் நம் அம்மாவைத் தானே காண்கிறோம், பின்னர் அவள்தானே நமக்கு அப்பாவை அறிமுகம் செய்து வைக்கிறாள்.

இந்த மூன்று ஆழ்வார்களும், "அந்தாதி தொடையில் அமைந்த" நூறு பாடல்கள். இவை முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என அழைக்கப் படுகிறது.

**********

# நாலாயிரம் திவ்ய பிரபந்தம் கிடைத்த வரலாறு

திராவிட வேதம், தமிழ் வேதம் என்றெல்லாம் போற்றி கொண்டாப்படும் நாலாயிர திவ்ய பிரபந்த பாடல்கள் நமக்கு கிடைத்ததே ஒரு சிலிர்ப்பூட்டும் வரலாறு. மஹான் நாத முனிகளே இதற்க்கு காரணம். திருக்குடந்தை சாரங்கபாணி கோவிலில் இவர் சேவித்துக் கொண்டு இருந்த போது, அங்கே வந்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள். "ஆரா அமுதே" என்ற பாடலை சேவித்தனர். அதன் அழகினில் மயங்கிய நாத முனிகள் அவர்களை அணுகி, "ஓராயிரத்தில் இப்பத்தும்" என ஒரு அடி இதில் வருகிறதே. மீதி 990 பாடல்கள் எங்கே? உங்களுக்குத் தெரியுமா என வினவ, அவர்களோ எங்களுக்குத் தெரியாது ஆழ்வார் திருநகரி சென்று மதுரகவி ஆழ்வாரின் வம்சாவளியினர் இடம் விசாரித்தால் தெரியும் என்றனர்.



நாதமுனிகளும் அங்கே சென்று விசாரிக்க. அவர்கள் ஒரு உபாயம் கூறுகின்றனர். எவர் ஒருவர் மதுர கவி ஆழ்வாரின் பாசுரங்களை 12 ஆயிரம் முறை பக்தியோடு சேவித்தால் அவர்கள் முன் பெரியாழ்வார் தோன்றி அருள்செய்வார் எனச் சொல்ல. நாதமுனிகளும் திருக்குருகூர் திவ்ய தேசம் சென்று அங்கே சுவாமி நம்மாழ்வார் குழந்தையாய் இருக்கையில் தவழ்ந்து சென்று தவத்தில் ஆழ்ந்த "உறங்கா புளிய மரம்" அருகில் சென்று பாசுரத்தை பன்னிரெண்டாயிரம் தடவை பக்தியுடன் சேவித்தார். (இந்த புளியமரம் இன்றும் இருக்கிறது. இது பூக்கும் ஆனால் காய்க்காது. இதன் இலைகள் மற்ற புளியமரத்தின் இலைகளை போல் இரவில் மூடிக்கொள்ளாது - எனவேதான் இது உறங்கா புளி என அழைக்கப்படுகிறது) பெரியாழ்வார் பிரசன்னமாகி, உன்பக்தியையும், விடா முயற்சியையும் மெச்சுகிறேன், ஓராயிரம் என்ன நாலாயிர பாடல்களையும் தருகிறேன் எனக் கூறி 4000 பாடல்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளை அளித்தார். அனைத்துமே தேன் போன்ற மதுரமான பாடல்கள். இந்த தமிழுக்கு மயங்கி தானே பெருமாளே இதன் பின் செல்கிறார். ஆமாம் பெருமாள் திருவீதி உலா செல்கையில் பெருமாளுக்கு முன்னால் பிரபந்தம் பாடிய படி திருக் கோஷ்டியினர் முன்னே செல்ல. அவர்களைத் தொடர்ந்து பின்னே செல்வார் பெருமாள். அவருக்குப் பின்னே வேத கோஷ்டியினர் செல்வர்.

(ஆழ்வார்கள் வாழ்க அடியார்கள் தாம் வாழ)



படம் உபயம்: திரு. பிரபு தாஸ், முதன்மை செயல் அலுவலர் சினிஹய்வு
Image credit: Prabhu Doss, CEO, CineHive

**********

# மரங்களின் மகத்துவம்

- திரு. வேணுகோபால் கிருஷ்ணமூர்த்தி




பொதுவாக மரக் கன்றுகளை நட்டு பராமரிப்பதை அனைவருமே விரும்புவர். மரங்களின் பயன்களை நாம் அனைவரும் அறிவோம். மழையை வருவித்தல், மண் அரிப்பை தடுத்தல், மரத்தின் மருத்துவ குணங்கள், வீட்டு உபயோக பொருட்கள் செய்ய. என இப்படி பலதரப் பட்ட பயன்களை தருகிறது மரம்.

நாம் நிழலில் நிற்பதற்காக மரம் வெய்யிலில் நிற்கிறது. இந்த மரவகைகளில் தெய்வீக தன்மையும் சிறப்பும் வாய்ந்த மரங்களை பற்றி இந்த வரிசையில் காண்போம்.

**வில்வ மரம்:**

18 ஆண்டுகளாய் நான் செய்துவரும் மரம் நடும் பணிக்கு பிள்ளையார் சுழி போட்டுக் கொடுத்ததே. இந்த வில்வ மரம்தான். அதுவும், நம் மஹாபெரியவாளின் தரிசன அனுபவங்கள் என்ற புத்தகத்தில் இருந்த ஒரு கட்டுரையை படித்த பின்பே, வில்வ மரத்தின் அருமை, பெருமைகளை உணர்ந்து. வில்வ மரம் வைக்கத் தொடங்கினேன். சுருக்கமாய் காஞ்சிபுரம் ஸ்ரீ மட வட்டாரத்தில் “வில்வம் வேணுகோபால்” என்ற பெயரை ஈட்டித்தந்ததே இந்த வில்வ மரம்தான். இன்றும் காஞ்சி காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் உள்ளே நுழைந்து வலதுபுறம் திரும்பினால், ஓங்கி உயர்ந்து வளர்ந்து நிற்கும் வில்வ மரம் 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் வைத்த மரம். பார்க்கும் போது எல்லாம் பழைய நினைவுகள் மனத்திரையில் நிழலாடும். பழைய நினைவுகள் என்றதும், இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மகா பெரியவா "**தரிசன அனுபவங்கள்**" - என்ற புத்தகத்தைப் படித்து, வில்வத்தின் மகிமைகளைத் தெரிந்து கொண்டேன், முதலில் ஸ்ரீ புதுப்பெரியவாளை, கும்பகோண ஸ்ரீ மடத்தில் தரிசித்து, 5 வில்வ கன்றுகளை காட்டி, ஆசி பெற்றேன். 108 வில்வ கன்றுகளை வைக்க பிராத்தித்து கொண்டேன். அவரது ஆசிப்படியே, முதல் கன்றினை கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் நட்டேன். அதுவரை மரங்களைப் பற்றி ஏதும் தெரியாத எனக்கு, படிப்படியாக நெறைய தகவல்கள் கிட்டியது. சிரமம் இன்றி நிறைய வில்வ கன்றுகள் கிடைத்தன. அத்துனை "கைராசி" மிக்கவர்.



தரிசன அனுபவங்கள் - 3 141

''இப்போ எல்லா இடத்திலேயும் எலெக்ட்ரிக் ஃபேன், ஃபிரிஜ்... இப்படி வந்துவிட்டது. அதனாலே, அதிதிகளை உபசரிக்கிற முறை கூட மறந்துடுத்து!... விசிறியாலே விசிறணும். தீர்த்தம் கொடுக்கணும் - இதெல்லாம் மறந்தே போச்சு! குழந்தைகளுக்குப் புரிய மாட்டேங்கிறது. அதனால் தான் ஜூஸ் கொடுத்து விசிறச் சொன்னேன். இதைப் பார்க்கிற சில பேர்களாவது நம்ம பண்பாட்டைச் செயல்படுத்துவா.

''வில்வ விருக்ஷம் ரொம்ப உத்கிருஷ்டமானது. பில்வ தளத்திலே ஸ்வர்ணம் இருக்கிறதாக வைத்ய சாஸ்திரம் சொல்றது. சிவ நிர்மால்ய வில்வதளம் தினமும் ஸ்வகரித்தால் தங்கபஸ்பம் சாப்பிட்ட மாதிரி உடம்பு பிரகாசிக்குமாம்!... வில்வப்பழம் தலையிலே தேய்த்துக் குளிக்கணும். அவ்வளவு குளிர்ச்சி. கண்ணுக்கு ரொம்ப நல்லது.

''இப்போ வில்வ மரமே அபூர்வமாகப் போயிடுத்து. சிவன் கோயில்களில் கூட கிழமாகப் போய்விட்ட சில மரங்கள் தான் இருக்கு. வில்வக் கன்று வைத்து வளர்த்தால் ரொம்பப் புண்ணியம் - ஸ்ரீ வ்ருக்ஷம். அதனாலே த்ரவ்யாபிவிருத்தின்னு பிரசாரம் பண்ணினால் கூடத் தேவலை...''

பெரியவா பேசி முடிக்கிற சமயத்தில் ஒரு வேளாளப் பெண்மணி வந்தாள். அவளும் களைத்திருந்தாள். வில்வப்பழ ரசமும் மோரும் கொடுக்கும் படி சிஷ்யரிடம் கூறினார்கள் பெரியவா.

வெளியே தகிக்கிற வெயில் தான்.

***

*** இந்த புத்தகத்தின் படம் பிரதிநிதித்துவ நோக்கங்களுக்காகவே (Scanned Image from the book is used for representation purposes only)

பிறகு, 108-கன்றுகள் வைத்து முடித்து விட்டேன், என ஸ்ரீ பாலப் பெரியவாளிடம் சொன்னபோது, "என்ன? - முடித்து விட்டேன் என்பதால், இதோடு நிறுத்தி விடுவீர்கள் போல" - வேண்டாம் நிறுத்த வேண்டாம் என்றார். பிறகு என்னிடம், "இதெல்லாம் எல்லோருக்கும் கிடைக்காது, உங்களுக்கு வைத்திருக்கிறது - தொடருங்கள் - செய்து கொண்டே இருங்கள்; நான் உங்களை ஒருவரிடம் அனுப்பி வைக்கிறேன். அவரிடம் வ்ருக்ஷங்களைப் பற்றி, மேலும் அறிந்து கொள்ளுங்கள் என்றார்.

நூற்றி எட்டுடன் முடித்துக் கொள்ளலாம், என முற்றுபுள்ளி (full stop) வைக்க இருந்த என்னை, அனுகிரஹித்து முற்றுப் புள்ளியை தொடர் புள்ளியாக (comma) மாற்றி இன்று வரை இந்த வ்ருக்ஷ கைங்கரியத்தை தொடர செய்தவர், ஸ்ரீ பாலப் பெரியவா என்பதே சத்தியம்.

ஆக செய்யும் காரியங்கள் யாவிலும், நமது மூன்று பெரியவர்களின் அனுகிரஹமும், ஆசியும் பின்னிப் பிணைந்து இருக்கிறது என்பதை பூரணமாய் உணர்ந்துள்ளேன். இந்த கருணா மூர்த்திகளுக்கு என்ன கைமாறு செய்ய முடியும்? எத்தனை ஜென்மம் எடுத்தாலும் கடனை தீர்க்க முடியாதே!



படங்கள் (வலஞ்சுழி): ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பால பெரியவா அருளாசி, ஓரிக்கை. வில்வம் நட தயார்நிலையில் என் கண்மணிகளுடன், கருக்கினில் அமர்ந்தவள் அம்மன் கோவிலில் மகிழம் நடும்பொழுது, 14 வருடம் முன்பு கலவையில் நட்ட மரம், மகா வில்வ இலைகள், தக்கோலத்தில் போட்டு மரம் நட்டபோது.

Images (clockwise): Blessings from Sri Sri Sri Bala Periyava at Orikkai, Getting ready for Vilvam implanting at Pirava Sthanam Kanchipuram, Magizham implanting at Karukkinil Amardhaval Amman Temple Kanchipuram, Admiring the tree planted at Kalavai 14 years ago, Maha Vilvam in its full glory, and Pottu Maram at Thakkolam.

வில்வம் பற்றிய ஒரு காணொளி கட்சி எனது யூடுப் சேனல்-இல்

https://www.youtube.com/watch?v=UxU2vJVFVL8



சரி, வில்வ மரத்தின் ஆன்மீக, மருத்துவ சிறப்புகளை காண்போம்.

"த்ரிதளம் த்ரிகுணாகாரம், த்ரிநேத்ரஞ்ச த்ரிஆயுதம்
த்ரி ஜென்ம பாப சம்ஹாரம், ஏக வில்வம் சிவார்ப்பணம்"

**- வில்வாஷ்டகம்**

மூன்று இலைகளைக் கொண்ட ஒரு வில்வ பத்திரத்தை எடுத்து சிவார்ப்பணமாக சமர்ப்பித்தால், நமது மூன்று ஜென்ம பாவமும் தீர்ந்து போகுமாம். அப்போ ஒரு வில்வ மரத்தை நட்டு சிவனுக்கு அர்ப்பணம் செய்தால் எத்தனை ஜென்ம பாவங்கள் போகும். 21 தலைமுறைகள் கரை ஏறுமாம். இந்த வில்வத்தில் பல வகைகள் உள்ளன. பொதுவாக ஒரே காம்பில் மூன்று இலைகளுடன் கூடிய இதில் சிறிய இலை, பெரிய இலை இருக்கும். 13 இலைகள் ஒரே காம்பில் இருக்கும் மஹா வில்வம். இது மிக அரிதானது, சிறப்பானது. பிறகு முகர்ந்தால் "கற்பூர வாசனை அடிக்கும் கற்பூர வில்வம், சுவைத்தால் இனிக்கும் சர்க்கரை வில்வம், காசி வில்வம், திரிமூர்த்தி வில்வம் என பல வகைகள் உண்டு.

## <u>வீடுகளில் வில்வம் வளர்க்கலாமா?</u> (பலரின் சந்தேகம்)

தாராளமாய் வளர்க்கலாம். ஆனால் "சுத்த பத்தம்"-முக்கியம். விலக்கு காலங்களில் பெண்கள் மரத்தின் அருகே செல்லக் கூடாது (வில்வம் என்று இல்லை. எந்த மரம், செடி, கொடி ஆனாலும்) பாத்திரம் கழுவிய நீர், துணி அலசிய நீர் போன்றவற்றை ஊற்ற கூடாது. சுத்தமான நீரையே ஊற்றவேண்டும். வில்வம் காய்த்த பிறகே, பூஜைக்கு இலை பறிக்க வேண்டும். வெள்ளி, செவ்வாய், திங்கள், பிரதோஷம், நாட்களில் பறிக்க கூடாது. வில்வத்திற்க்கு நிர்மால்ய தோஷம் இல்லை. எனவே பழைய இலை ஆனாலும் சரி, ஒருமுறை பூஜை செய்த இலை ஆயினும் சரி. சிறிது ஜலத்தால் ப்ரோக்ஷணம் (தெளித்துவிட்டு) செய்து எத்தனை தடவை வேண்டுமானாலும் பூஜைக்கு பயன் படுத்தலாம்.

எனவே இத்தகைய சிறப்பும், மகத்துவமும் வாய்ந்த வில்வ மர கன்றுகளை, அரசு/தனியார் நர்சரி பண்ணைகளில் வாங்கி, உங்கள் வீட்டில் இடம் இருந்தால் நட்டு வளருங்கள். இல்லையேல் கொஞ்சநாள் உங்கள் வீட்டின் முற்றத்தில் வைத்து வளர்த்து பின். அருகில் உள்ள சிவாலயத்தில் நட்டு விடுங்கள்.

*எளிதான முயற்சி, பெரியதான புண்ணியம், அவசியம் செய்யுங்கள்!!!*

*[ஸ்ரீ பாலப் பெரியவா - என்னை யாரிடம் அனுப்பினார்? அந்த மஹான், மஹானுபாவர் என்னை எப்படி வழி நடத்தினார் - என்பது அடுத்த இதழில்]*

**********

# அன்று சொன்னது அதில் அர்த்தம் உள்ளது



-ஸ்ரீமதி லட்சுமி நடராஜன்





தைப்பொங்கல் வருகிறது அனைவரது இல்லங்களிலும் மகிழ்ச்சி பொங்க பொங்கல் பண்டிகை கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் விரைவில் தொடங்கிவிடும். சிலர் முறையாக புது மண் பானைகளோ அல்லது பரம்பரைகளாக உபயோகிக்கும் வெங்கல/பித்தளை உரிளிகளையோ இதற்காக சுத்தம் செய்து தயார் செய்வர். நம்மில் பலர் சுலுவாக எவர்சில்வர் பானைகளிலும் இன்னும் சிலர் குக்கரிலிலேயே பொங்கி சம்ப்ரதாயத்தை நிறைவேற்றி மகிழ்வோம். தவறில்லை! காலச்சக்கரத்திற்கு ஏற்ப காலில் சக்கரம் கட்ட வேண்டிய கட்டாயம். ஆனால் சம்ப்ரதாயங்களுக்கு பின்னால் உள்ள சூட்சுமங்களை கண்டுகொண்டால் நாம் சற்றே சிரமம் எடுத்து பண்டிகைகளை அர்த்தமுள்ளதாக கொண்டாட கூடும்.

பொங்கல் பானை கழுத்தில் எதற்கு மஞ்சள் கொத்தும் இஞ்சி கொத்தும் கட்டுகிறோம் என்று யோசித்ததுண்டா? சும்மா சம்ப்ரதாயம் தானே எங்கே கட்டினால் என்ன தோரணமாக தொங்க விடலாம், படையலில் ஒரு ஓரமாக வைத்து விடலாம், அல்லது அன்று செய்யும் பொங்கல் கூட்டில் சேர்த்து விடலாம். ஆனால் குறிப்பாக எதற்காக பானை கழுத்தில் கட்ட வேண்டும்?

காரணமுண்டு, கண்டுகொள்வோம்!

சூரியதேவனுக்கு நன்றி செலுத்தும் வைபவமான இப்பண்டிகையானது திறந்தவெளியிலேயே மிகச்சமீப காலம்வரை கொண்டாடபட்டு வந்தது. ஏன், இன்றும் கிராமங்களிலும், சில அப்பார்ட்மென்ட் கலாச்சாரம் பரவாத நகர்புறங்களிலும், சொற்பமான நகர்புற தனி வீடுகளிலும் பொங்கல் பொங்குவது வீட்டு வாசல், நடு அல்லது பின் முற்றங்களில் தான். மார்கழி மாத குளிர் எஞ்சியிருக்கும் தைமாத முதல் நாள்; முன்தின போகி பண்டிகையின் புகை அகலாமல் காற்றில் படிந்துள்ள காலம். திறந்தவெளி கொண்டாட்டம் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைந்திடவே இந்த ஏற்பாடு.

பானையின் கழுத்தில் கட்டியுள்ள மஞ்சளும் இஞ்சியும் அடுப்பு நெருப்பின அனலில் பட்டு அவைகளின் முக்கிய வேதிப்பொருட்களான, முறையே, குர்குமின் (curcumin) எனப்படும் மஞ்சளகம் மற்றும் சிஞ்செரால் (Gingerol) நுன்புகையாக வெளியேறி காற்றில் கலந்து நிறைந்து நிற்கும். அந்தப் பனியும் புகையும் கலந்தச் சூழலில் உள்ள நச்சுக்களை நீக்குவதோடல்லாமல் சுற்றி உள்ளவர்களின் சுவாசப்பாதையில் உள்ள தொற்றுக்களுக்கு மருந்தாகிறது, குறிப்பாக, இவ்விரு வேதிப்பொருட்களின் புற்றுநோய், பாக்டீரியா, மற்றும் அழற்ச்சி எதிர்ப்பாற்றல் குறிப்பிடதக்கவை. நுன்புகையாய் வெளியேறுவது தான் இச்சம்ப்ரதாயத்தின் சூட்சமம். அந்தக்காலத்து அரோமாதெரபி! இந்தக்கால அறிவியல் ஆய்வுகள் பல இதை உறுதிப்படுத்துகின்றன.

மேலும் அப்பச்சைத் தாவர கொத்துகள் சூடுபொருப்பதால் கணமான பொங்கல் பானையை லகுவாக தூக்கலாம் என்பது கூடுதல் பயன்.

*அறிந்துக்கொள்வோம் அர்த்தங்களை!*


*************


# மஹாபாரத கொடிவழி

குரு ராஜவம்சத்தின் பரம்பரையை குறிக்கும் அட்டவணை


- அ. பூஜிதா

அனைவருக்கும் நமஸ்கராம். என் பெயர் அ. பூஜிதா. நான் திருச்சி மாவட்டத்தில் உள்ள உய்யக்கொண்டான் திருமலை என்ற ஊரில் வசிக்கிறேன். இந்த மாத இதழுக்கு "மஹாபாரத கொடிவழி" என்ற தலைப்பில் அரசன் பிரதிபன் முதல் பரீட்சித் மகாராஜா வரை குரு ராஜவம்சத்தின் பரம்பரையை குறிக்கும் அட்டவணையை சமர்ப்பிக்கிறேன்.






மகாபாரதத்தில் பாண்டவர் ஐவருக்கும், திரௌபதைக்கும் பிறந்தவர்கள் உபபாண்டவர்கள் என்று அழைக்கப்பட்டனர்




மகாபாரதத்தில் பாண்டவர்களின் மற்ற புதல்வர்கள்

எனக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் என் அம்மா, அப்பாவுக்கு என் சின்சர் தங்க்ஸ்.

***********

# தமிழ் பழமொழிகள்

## கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்து கண்டுபிடி

1. ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பை பூ __________
2. கிட்டாதாயின் வெட்டென __________
3. நுணலும் தன் வாயால் __________
4. பொறுத்தார் பூமி __________
5. யானைக்கும் அடி __________
6. கழுதைக்கு தெரியுமா __________ வாசனை
7. சிறு துரும்பும் பல் குத்த __________
8. நொண்டி குதிரைக்கு சறுக்கியது __________
9. பசி உள்ளவன் __________ அறியான்
10. அடிமேல் அடி வைத்தால் __________ நகரும்

1. சர்க்கரை
2. மற
3. கெடும்
4. ஆள்வார்
5. சறுக்கும்
6. கற்பூர
7. உதவும்
8. சாக்கு
9. ருசி
10. அம்மியும்

# சின்ன சின்ன ஸ்லோகங்கள்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம்
மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

(சம்ஸ்க்ருதத்தில்)
கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலசார பக்ஷிதம்
உமாஸுதம் சோகவிநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

(ஆஞ்சநேய ஸ்வாமி பற்றி)
மனோஜவம் மாருத துல்ய வேகம்
ஜிதேந்த்ரியம் புத்திமதாம் வரிஷ்டம்
வாதாத்மஜம் வான ரயூத முக்யம்
ஸ்ரீராம தூதம் சிரஸா நமாமி.

(தமிழில்)
அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆராக
ஆருயிர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டு அயலாலூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் எம்மை அளித்துக் காப்பான்.

# மகா சிவராத்திரி அன்று கிரந்த (புத்தக) தானம்

**சிவாய நமக**



இடம்: ஸ்ரீ புண்ணிய கோடீஸ்வரர் ஆலயம், சின்ன காஞ்சிபுரம்
Image taken at Sri Punniyakoteeswarar Temple, Chinna Kanchipuram


"தானமும் தவமும் தான் செய்யவராயின் வானவர் நாடும் வழி திறந்திடுமே" என்பது அவ்வை வாக்கு.

அதுவும் மஹாசிவராத்திரி அன்று ஆலயம் வரும் சிவனடியார்கள், பக்தர்களுக்கு அறநூல்களை இலவசமாய் அளிப்பது அளவற்ற புண்ணியத்தை அளிக்கும். உங்களுக்கும் அப்புண்ணியம் பெற இதோ ஒரு அறிய வாய்ப்பு. தேவார, திருவாசகப் பதிகங்களில், ஒரு ஐந்து பதிகங்களைத் தேர்வு செய்து (5 X 11 = 55) பதிகங்களைத் தேர்வு செய்து, "பலன்தரும் பதிகங்கள் " என தலைப்பிட்டு புத்தகமாக அச்சிட்டு (தோராயமாக 25 பக்கங்கள் வரும்) வழங்க இருக்கிறோம், நீங்களும் இப் புண்ணிய காரியத்தில் பங்கு பெறலாம். உங்கள் பகுதியில் நீங்களே மஹாசிவராத்திரி அன்று ஆலயத்தில் வைத்து பக்தர்களுக்கு வழங்கலாம். பதிவு செய்து கொண்டவர்களுக்கு 108 புத்தகங்கள் உங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இதற்கு விலை உண்டு. செல்வத்தின் திறவுகோல் புத்தகம் போல், கொரியர் செலவு மட்டும் பெற்றுக் கொண்டு இலவசமாய் வழங்க இயலாது.

உங்கள் பகுதியில் விநியோகம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் முன்பதிவு செய்து கொள்ளவும். தேவைக்கு ஏற்ப, புஸ்தகங்களை அச்சிட சொல்லி, எவ்வளவு பணம் என முன்கூட்டியே தகவல் தரப்படும். பிறகு நீங்கள் பணம் அனுப்பி தரவும்.

விருப்பம் உள்ளோர் தொடர்பு கொள்ள வேண்டிய வாட்சப் எண்: +91 94434 86117.

# ஏன் பூர்ண பலம்?



இந்த மின் சஞ்சிகைக்கு ஏன் "பூர்ண பலம்" என பெயர் வைக்கணும்?

ஈஸா வாஸ்ய உபநிஷத்தில் ஒரு மந்திரம் இருக்கிறது. அது வருமாறு,

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ணமுதச்யதே
பூர்ணஸ்ய பூர்ண மாதாய
பூர்ண மேவா வசிஷ்யதே
ஓம் ஷாந்தி ஷாந்தி ஷாந்தி: ||

**இதன் அர்த்தம்:**
வெளியிலும் பூர்ணம், உள்ளேயும் பூர்ணம்
சர்வேஸ்வரனின் ஸ்ருஷ்டியான இந்த
பிரபஞ்சமும் பூர்ணம்
சர்வேஸ்வரனும் பூர்ணம்

இந்த பூரணத்தில் இருந்து பூரணத்தை எடுத்தால் பூரணமே மிஞ்சும்.
முழுமைத் தன்மையில் இருந்து குறைவு படுவதில்லை.
எனவே முரண்பாடு வேண்டாம். உடல், மனம், ஆத்மா இந்த மூன்றிலும் அமைதி நிலவட்டும்.

மஹாபெரியவா கையில் வைத்துள்ள மட்டை உரிக்காத முழு தேங்காய்க்கு "பூர்ண பலம்" என்பார்கள். எந்த சுபகார்யத்திற்கு, பத்திரிக்கை வைத்து ஆசி வேண்டினாலும், ப்ரசாதத்தோடு இந்த மட்டை தேங்காயையும் வைத்து ஆசி கூறுவார். ஏனவே நம் எல்லோருக்கும் எல்லா வகையிலும், வெளியுலக லௌகீக தேவைகளும், உள்ளுக்குள்ளே உள்ள ஆத்மாவின் தேவைகளும் குறைவு படாது பூர்ணமாக கிடைக்க வேண்டும் என்பதற்காக நம் பெரியவா நம்மை ஆசீர்வதிக்கிறார் என்பதன் அர்த்தம்தான் இந்த "**பூர்ண பலம்**".

ஜெய ஜெய சங்கர
ஹர ஹர சங்கர



